## குழந்தைகளுக்கான மையங்கள் (Children’s Centres): அடிக்கடி எழும் கேள்விகள்

### குழந்தைகளுக்கான மையங்கள் என்றால் என்ன, அவை எதற்காக உருவாக்கப்படுகின்றன?

குழந்தைகளுக்கான மையங்கள் என்பவை, இளம் குழந்தைகள் மற்றும் அவர்தம் குடும்பங்களுக்கு குழந்தை கவனிப்பு, மருத்துவம், குடும்ப மற்றும் ஆதரவு சேவைகளை வழங்கும் இடங்கள் அல்லது சேவைகள் ஆகும். இந்த சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பது இடத்துக்கு இடம் மாறும். குழந்தைகளுக்கான மையக் கட்டிடத்தில் சேவைகள் வழங்கப்படலாம் அல்லது உள்ளூர் நூலகம், மருத்துவ மையம் அல்லது கிராமக் கூடம் போன்ற சமூக பொது இடங்களின் வாயிலாக வழங்கப்படலாம்.

ஒவ்வொரு குழந்தையும் முக்கியம் (Every Child Matters) என்ற திட்டத்தின் அறிமுகம், குழந்தைகள் அனைவருக்கும் கிடைக்கும் சேவைகளின் பலனை மேம்படுத்துவதற்கான இயக்கத்தின் அங்கமாக, குழந்தையின் ஆரம்ப ஆண்டுகளில் ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குதல் என்ற கருத்தை முன்வைத்தது. நாட்டின் மிகவும் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்ட ஷ்யூர் ஸ்டார்ட் (Sure Start) உள்ளூர் திட்டங்களின் நடைமுறை மற்றும் கருத்தின் அடிப்படையில் குழந்தைகளுக்கான மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன; இந்த ஷ்யூர் ஸ்டார்ட் திட்டங்கள் இப்போது குழந்தைகள் மையங்களால் மேற்கொள்ளப்பட்டு விட்டன.

தரமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அனைவரும் அணுகக்கூடிய சேவைகளை வழங்குதல் என்பதே அனைத்திலும் முக்கியமானது, அத்துடன் உள்ளூர் சமூகத்தின் தேவைகள் எப்போதும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. சேவை வழங்கலில் பெற்றோர் பங்கேற்பு மற்றும் தாக்கமும் முக்கியமானவை.

### குழந்தைகளுக்கான மையங்கள் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?

மருத்துவம், கல்வி மற்றும் ஆதரவு ஆகியவற்றில், குறிப்பாக ஆரம்ப நிலையிலேயே தலையிட்டு குறைநீக்கும் செயல்களின் கவனம் செலுத்துகிற இடையீடற்ற சேவைகளை உருவாக்குவதன் வாயிலாக, அனைத்துக் குழந்தைகளின் திறன் வெளிப்பாட்டை கணிசமாக மேம்படுத்துவதே முதன்மையான நோக்கம். இது தரமான சேவைகளின் வாயிலாக செய்யப்படுகிறது, குழந்தைகள், பெற்றோர் மற்றும் பரந்துபட்ட சமூகத்திற்கு விரிவான மற்றும் நீண்டகாலத் தாக்கங்களை இது ஏற்படுத்தும்.

குழந்தைகளுக்கான மையங்கள் இவற்றில் பங்களிக்கும்:

- ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்வில் சிறந்த துவக்கம்
- பெற்றோர்களுக்கு மேம்பட்ட வாய்ப்புகள்

- மேலும் உறுதியான மற்றும் பாதுகாப்பான சமூகங்கள்

இது ஏதும் புதிய கருத்து அல்ல, குழந்தைகளுக்கான மையங்கள் என்பவை புதிதாக ஒன்றைத் தொடங்குவதற்குப் பதிலாக ஏற்கெனவே உள்ள நல்ல நடைமுறையின் அடிப்படையில் கட்டுவதாகும். இளம் குழந்தைகள் உள்ள கணிசமான குடும்பங்கள் ஏற்கெனவே உள்ளூர் சேவைகளின் வாயிலாக பயன்களைப் பெறுகின்றன, குழந்தைகளுக்கான மையங்கள் இந்த சேவைகளை இன்னும் மேம்படுத்துகின்றன, இன்னும் அதிக குடும்பங்களுக்கு விரிவுபடுத்துகின்றன, எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கு சேவை வழங்கலில் கூட்டு அணுகுமுறையை பின்பற்றுகின்றன.

**குழந்தைகளுக்கான மையங்கள் எங்கே அமைந்திருக்கும், எத்தனை குழந்தைகள் பயன் பெறும்?**

2011க்குள் கென்ட் பகுதியில் உள்ள ஒவ்வொரு சமூகத்திற்கும் குழந்தைகளுக்கான மைய சேவைகள் கிடைக்கும், இந்த மையங்களை உருவாக்குவதன் வாயிலாக 0-5 வயதுள்ள 81,600 குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

**குழந்தைகளுக்கான மையங்களில் என்ன சேவைகள் வழங்கப்படும்?**

குழந்தைகளுக்கான மையம் ஒவ்வொன்றும் அந்தந்த சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும், எனவே சேவைகள் வேறுபடலாம், ஆயினும் இவை அதில் அடங்கும்:

- குடும்ப மற்றும் பெற்றோர் கவனிப்பில் ஆதரவு மற்றும் பெற்றோர்களை சென்றடைதல், ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கொண்டவர்களும் இதில் அடங்குவர்
- பெற்றோர் மற்றும் குழந்தைகள் நேரடியாக வரும் வசதி
- ஆரம்பக் கல்வி பற்றிய தகவல், குழந்தை கவனிப்பு மற்றும் பள்ளி செல்லத் துவங்கும் குழந்தைகள் உள்பட குழந்தை கவனிப்புக்கான வாய்ப்புகள்
- பிரசவத்துக்கு முந்தைய வகுப்புகள் மற்றும் சிசுக்கள் மருத்துவமனைகள்
- தாய்ப்பால் தருதல், பேச்சு மற்றும் மொழி போன்ற குழந்தை வளர்ப்பு மற்றும் குடும்ப நல சேவைகள் பற்றிய தகவல் மற்றும் அறிவுரை
- பயிற்சி அல்லது குழந்தை வளர்ப்பு வகுப்புகளுக்குச் செல்கிற பெற்றோர்/கவனிப்பாளர்களின் குழந்தைகளை கவனிப்பதற்கான கிரெச் வசதிகள்

- கல்வி அல்லது பயிற்சிக்குத் திரும்புதல் அல்லது புதிய வேலை தேடுவது பற்றி சிந்திக்கும் பெற்றோர்களுக்கு ஊக்கம் மற்றும் ஆதரவு
- ஊனமுற்ற குழந்தைகள் மற்றும் சிறப்புத் தேவை உள்ள குழந்தைகளுக்கான சேவைகள்
- தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்களுடன் இணைப்புகள்
- உள்ளூர் பள்ளிகளுடன் இணைப்புகள்

**கென்ட் குழந்தைகள் அறக்கட்டளை (Kent Children's Trust) என்பது என்ன?**

கென்ட் பகுதியில் பிறந்தது முதல் 19 வயது வரையிலான குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் நலன் மற்றும் வாழ்க்கை வாய்ப்புகளை மேம்படுத்த கென்ட் குழந்தைகள் அறக்கட்டளை (KCT) சமூக கவனிப்பு, ஆரோக்கியம், காவல்துறை, கல்வி மற்றும் இதர சேவைகளை ஒன்றுசேர்க்கிறது.

**குழந்தைகளுக்கான மையம் திட்டத்தை வழங்குவதற்கு யார் பொறுப்பு?**

23 உள்ளூர் குழந்தைகள் சேவை கூட்டாளிகள் (Local Children's Service Partnerships – LCSPs) கென்ட் பகுதியில் உள்ளன, இவை KCT அறக்கட்டளையின் உள்ளூர் "அங்கங்களாகச்" செயல்படுகின்றன. LCSP ஒவ்வொன்றும் குழந்தைகளுக்கான மைய செயல்பாட்டை வழங்கும் பொறுப்புடையது. ஒவ்வொரு மையமும் உள்ளூர் ஆலோசனை வாரியத்தின்கீழ் செயல்படும், இந்த வாரியம் LCSPக்குப் பதிலளிக்கும் பொறுப்புடையது. இந்த வாரியங்களின் பிரதிநிதிகளில் தன்னார்வ மற்றும் அரசுசார் துறைகளைச் சேர்ந்தவர்களும் உள்ளூர் சமூகத்தின் பெற்றோர்களும் அடங்குவர்.

**மையங்கள், குறிப்பாக ஒரு பள்ளியின் வளாகத்தில் இருந்தால், எவ்வாறு நிர்வகிக்கப்படும், நடத்தப்படும்,?**

மையத்தின் அன்றாடப் பணிகளின் ஒருங்கிணைப்பு அந்தக் குழந்தைகளுக்கான மைய மேலாளரின் பொறுப்பு, இவர் பொதுவாக கென்ட நகராட்சிக் குழுவால் Kent County Council நியமிக்கப்படுவார். ஒவ்வொரு மையமும் உள்ளூர் ஆலோசனைக் குழு ஒன்றைக் கொண்டிருக்கும், இதில் ஒரு தலைமை ஆசிரியர் அல்லது பள்ளி நிர்வாகியும் இருக்கலாம்; இந்த ஏற்பாடுகள் அந்தந்த LSCPயைப் பொறுத்து வேறுபடும். குழந்தைகளுக்கான மைய நிர்வாகம் பொதுவாக பள்ளி நிர்வாக அமைப்புகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டிருக்காது.

**பெற்றோர் அனைவருமே சேவைகளை அணுக இயலுமா அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள் வசிப்பவராக இருக்க வேண்டுமா?**

பள்ளி செல்லும் வயதுக்கும் குறைந்த குழந்தைகளைக் கொண்ட பெற்றோர் எவரும் குழந்தைகளுக்கான மைய சேவைகளைப் பெறலாம். குடும்பங்கள் பொதுவாக தமக்கு மிக அருகில் உள்ள மையத்துக்குச் செல்வர், இருப்பினும் அவர்களின் தேவைகளை சிறப்பாக நிறைவு செய்யும் மையத்துக்கும் செல்லலாம். குழந்தைகளுக்கான மையத் திட்டத்தின் இறுதிக் கட்டம், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் அனைத்துமே 2011க்குள் இந்த சேவைகளைப் பெறுவதை உறுதி செய்யும்.

**குழந்தைகளுக்கான மையங்கள் சமூக சேவைகளால் நடத்தப்படுகிறதா?**

குழந்தைகளுக்கான மையங்கள் வழங்கும் சேவைகள், உள்ளூர் சமூகத்திற்கு சேவைகளை வழங்கும் பல்வேறு அமைப்புகளால் தரப்படுபவையாக இருக்கும்.

சில செயல்பாடுகளை சமூக சேவைகள் துறைகள் நடத்தலாம், ஆனால் குழந்தைகளுக்கான மையங்களில் எதுவும் சேவைகளை வழங்கும் துறைகளால் நடத்தப்படுவதில்லை.

**குழந்தைகளுக்கான மைய சேவை கிராமப் பகுதிகளில் எவ்வாறு உருவாகும்?**

குழந்தைகளுக்கான மைய சேவைகள் கிராமப் பகுதிகளில் எவ்வாறு வழங்கப்படும் என்பது அந்தந்தப் பகுதியைப் பொறுத்தது. அந்தப் பகுதியில் மருத்துவ மற்றும் இதர சேவைகளை வழங்கும் இடமாக குழந்தைகளுக்கான மையம் இருக்கலாம், அல்லது உள்ளூரின் சமூகக் கூடங்களைப் பயன்படுத்தலாம்.

**குழந்தைகளுக்கான மையங்களை உருவாக்குவதில் முக்கியக் கூட்டாளி அமைப்புகளே எவை?**

முக்கியக் கூட்டாளிகள் உள்ளூரின் ஆரம்ப சுகாதார கவனிப்பு அறக்கட்டளையுடன் (Primary Care Trust – PCT) தொடர்புடையவர்கள், இவர்களில் மருத்துவப் பணியாளர்கள், தாதிகள், பேச்சு மற்றும் மொழி மருத்துவர்கள் மற்றும் பள்ளிச் செவிலியர்களும் இருக்கலாம். ஹோம் ஸ்டார்ட் (Home Start), சமூக தன்னார்வச் சேவைகள் (Community Voluntary Services - CVS), தேசிய குழந்தைகவனிப்பு தாதிகள் சங்கம் (National Childminding Association), ஜாப்சென்டர் பிளஸ் (Jobcentre Plus) போன்ற அமைப்புகள் உள்பட தன்னார்வத் துறைகளுடனும் தொடர்புகள் உண்டு.

**குழந்தைகளுக்கா மைய ஊழியர்கள் தகுதி பெற்றவர்களா?**

நர்சரி ஊழியர் உள்பட குழந்தைகளுக்கான மைய ஊழியர்கள் தேவையான தகுதி பெற்றவர்கள், குற்றங்கள் பதிவு நிறுவனத்தால் (Criminal Records Bureau - CRB) சரிபார்க்கப்பட்டவர்கள்.

**குழந்தை கவனிப்பு தாதிகள் இதில் எவ்வாறு ஈடுபடுகிறார்கள்?**

குழந்தைகள் மைய சேவைகள் அனைத்தும் அந்தப் பகுதியில் உள்ள குழந்தை கவனிப்பு தாதிகளுக்கு ஆதரவு தர வேண்டும், உதாரணமாக, பயிற்சி வாய்ப்புகள், டிராப்-இன் வகுப்புகள், பொம்மைகள் மற்றும் சாதனங்களை இரவல் தருதல்.

**கூடுதல் பள்ளிச் சேவைகள், குழந்தைகளுக்கான மையங்களுடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன?**

பள்ளிகளுக்கான கூடுதல் சேவைகள் (Extended School Services) என்பவையும் குழந்தைகளுக்கான மையங்களும் ஒரேமாதிரியான தேவைகளைக் கொண்டுள்ளன, உதாரணமாக பெற்றோருக்கு ஆதரவளித்தல், ஆகவே இவை இணைந்த சேவைகளை வழங்கவும் ஒன்றுக்கொன்று உதவக்கூடிய சேவைகளை உருவாக்கவும் வாய்ப்புகள் உண்டு. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்த கூடுதல் பள்ளி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் குழந்தைகளுக்கான மைய மேலாளர்கள் இணைந்து செயல்படுவார்கள்.

**கென்ட் குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் தகவல் சேவை (Kent Children & Families Information Service) என்பது என்ன?**

கென்ட் குழந்தைகள் மற்றும் குடும்ப தகவல் சேவை (CFIS) என்பது குழந்தை கவனிப்பு, குழந்தை வளர்ப்பு மற்றும் தொடர்புடைய இதர சேவைகள் பற்றி பெற்றோர்/கவனிப்பாளர்களுக்கு பாரபட்சமற்ற ஆலோசனையும் வழிகாட்டலும் தருகிறது. குழுவின் உறுப்பினர்கள் அவ்வப்போது குழந்தைகளுக்கான மையத்துக்கு வருகை செய்வார்கள், பெற்றோர்/கவனிப்பாளர்கள் தமது தனிப்பட்ட தேவைகளைப் பற்றி உரையாட அவர்களை சந்திக்கலாம் அல்லது முன்கூட்டியே நேரப் பதிவு செய்யலாம்.

**பெற்றோர் மீண்டும் பணி அல்லது பயிற்சிக்குச் செல்வதில் குழந்தைகளுக்கான மையங்கள் எவ்வாறு உதவுகின்றன?**

வேலை அல்லது பயிற்சிக்குத் திரும்ப விரும்புகிற பெற்றோர்/கவனிப்பாளர்களுக்கு ஆதரவளிக்க குழந்தைகளுக்கான மையங்கள் ஜாப்சென்டர் பிளஸ் அமைப்புடன் இணைப்புக் கொண்டுள்ளது, தமது தேவைகளை நிறைவு செய்ய பெரியவர்கள் யாரும் இல்லாத குடும்பங்களுக்கு இது உதவும். சில மையங்களில் ஜாப்சென்டர் பிளஸ் நேர்காணல்களை நடத்துகிறது, பெற்றோர்களின் டிராப்-இன் வகுப்புகளின்போது ஆலோசனை வழங்குகிறது. உள்ளூர் வேலைவாய்ப்புகள் மற்றும் குழந்தைகவனிப்பு வாய்ப்புகள் பற்றிய தகவலும் கிடைக்கும்.

சலுகைகள், கடன் ஆலோசனைகள் மற்றும் இதர நிதி விஷயங்களில் பெற்றோர் மற்றும் கவனிப்பாளர்களுக்கு ஆதரவளிக்க முதியோர் கல்வி (Adult Education), குடிமக்கள் ஆலோசனை நிறுவனங்கள் (Citizens Advice Bureaus) மற்றும் கடன் சங்கங்கள் (Credit Unions) போன்ற அமைப்புகளுடனும் குழந்தைகளுக்கான மையங்கள் இணைப்புகளைக் கொண்டிருக்கலாம்.

கென்ட் குழந்தைகளுக்கான மையங்கள் (Kent Children's Centres) பற்றிய தகவல் அறிய தயவுசெய்து தொடர்பு கொள்க:

கென்ட் குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் தகவல் சேவை (Kent Children & Families Information Service) தொலைபேசி 08000 32 32 30

மின்னஞ்சல்: childrenscentres@kent.gov.uk

வலைதளம்: www.kent.gov.uk/childrenscentres
மற்றும்
www.kentchildrenscentres.org.uk

இந்தப் பிரசுரத்தில் உள்ள தகவல் மற்றும் அறிவுரைகள் இது அச்சிடப்பட்ட நேரப்படி சரியானது.

பார்வை: cc/03/09/b